# அராலி இறங்குதுறைக் கடல் பகுதியில் கடற்படையினரின் இருபடகுகள் சிக்கின!

## படையினர் கடற்பாதையை தவறவிட்டனர்

காரைநகரில் இருந்து அராலித்துறையை நோக்கி நேற்றுக்காலை 8 மணிக்கு வந்து கொண்டிருந்த இரு கடற்படைப் படகுகள் அப்பகுதிக் கடலில் சிக்குண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இக்கடல் ஆழம் குறைந்திருப்பதால் படகுகள் செல்லும் பாதையை கடற்படையினர் தவற விட்டதாலேயே இவ்வாறு கற்பாறையில் சிக்குண்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து அராலி தெற்கு, கிழக்கு பகுதி மக்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். ஹெலிக்கப்டர்களும், சீபிளேனும் இப்பகுதியை நேற்று வட்டமிட்ட வண்ணம் இருந்தன.

18,01,07


பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 279 பிரசோறபத்தி ஐப்பசி 02 (19 - 10 - 1991) சனி


# செம்பியன்பற்று கடலிலிருந்து அதிகாலை பீரங்கித் தாக்குதல்

## எதிர்த்து புலிகளும் தாக்குதல்

நேற்று அதிகாலை வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினர் கடும் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர் கரையை நோக்கி வந்த இரு கடற்படை படகுகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தி விரட்டினர்; இதைத் தொடர்ந்தே கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் வடமராட்சி கிழக்கு மணற்காடு, செம்பியன்பற்று கடற்பகுதியில் தரித்து நின்ற பீரங்கிப்படகுகள் கரையை நோக்கிகடும் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டன.

கடற்படை படகுகளை எதிர்த்து விடுதலைப்புலிகளும் தாக்குதல் நடாத்தினர். சுமார் அரை மணிநேரம் இருதரப்பினரும் தாக்குதல் நடாத்திய வண்ணமிருந்தனர்.

மோதலால் பீரங்கித்தாக்குதலின் சத்தம் யாழ் நகர் வரை கேட்கக்கூடியதாக இருந்தது.

அரைமணிநேரத்தின் பின் கடற்படையினர் தமது பீரங்கித்தாக்குதலை நிறுத்திக் கொண்டனர்.

இச்சம்பவத்தினால் வடமராட்சி கிழக்கில் மிகுதியாக இருந்த மக்களும் இடம் பெயர்ந்தனர். (09)

## தீவுப்பகுதியிலிருந்து மேலும் மக்கள் இடம்பெயர்வு

புங்குடுதீவு சாட்டி, வேலணை மரிசன் கூடல் அராலி, குறிகாட்டுவான் ஆகிய பகுதிகளிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து யாழ் நகர் பகுதிகளில் தங்கியுள்ளனர்.

நேற்றுக்காலையிலிருந்து மாலை வரை மக்கள் நடையாகவும் வண்டிகளிலும் சைக்கிள்களிலும் வந்து சேர்ந்ததைக் காணமுடிந்தது

இவ் அகதிகளை தங்கவைப்பதற்கான முயற்சியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தொண்டர் ஸ்தாபனங்கள், பொது ஸ்தாபனங்கள் ஒழுங்கு செய்து வருகின்றன.

யாழ் நகரில் பெருந்தொகையான அகதிகள் பாடசாலைகளிலும் தேவாலயங்களிலும் தங்கியுள்ளனர்.

07, 06

## சரவணை, புங்குடுதீவுப் பகுதியில் அகோர பீரங்கித் தாக்குதல்கள்

நேற்றுக்காலை 8 மணியளவில் சரவணைப்பகுதியில் இருந்த ஒரு தொகுதி இராணுவத்தினர் வங்களாவடிக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

குண்டுவீச்சு விமானங்கள், இரண்டு ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல்களை இலக்கின்றி மேற்கொள்ள படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டவண்ணம்வெளியேறினர்.

படையினரை எதிர்த்துவிடுதலைப்புலிகள் கடும் தாக்குதல்களை தொடுத்துள்ளனர்.

புங்குடுதீவு கடற்பரப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பீரங்கித்தாக்குதல்களினால் புங்குடுதீவுப்பகுதிகளிலும் மற்றும் இதரபகுதிகளிலும் பாரிய சத்தங்களுடன் குண்டுகள் வீழ்ந்து வெடித்துள்ளன.

இதனால் அப்பகுதிகளில்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வல்வையில் குண்டு வீச்சு

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் வல்வெட்டித் துறையில் இரு பொம்மர்கள் தாக்குதல்களை மேற்கொண்டன.

இதனால் வல்லை நடராஜ

—04ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவில் குண்டு வீச்சு

மாலை 4 45 மணியளவில் மண்டைதீவுப்பகுதியை நோக்கி இரு பொம்மர் விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

சுமார் ஆறுகுண்டுகளுக்கு மேல் வீசியதில் பல வீடுகள் சேதமடைந்தன. 07

## கட்டைக்காட்டுப்படையினர் கடும் பீரங்கித் தாக்குதல்

நேற்றுக் காலை 5 மணிக்கு கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி கடற்பரப்பிலிருந்த படையினர் குடத்தனை, அம்பன், மணற்காடு, நாகர் கோயில் ஆகிய பகுதியிலுள்ள குடிமனைகளை நோக்கி பீரங்கித்தாக்குதல்களை நடாத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதி குடிமனைகள் சேதப்படுத்தப்பட்டதாக

—04ஆம் பக்கம் பார்க்க

## வேலணை ஆஸ்பத்திரியும் மூடப்பட்டது

வேலணைவைத்திய சாலையில் தங்கியிருந்த நோயாளர்கள் வெளியேறியுள்ளனர்.

பாதுகாப்புத்தேடி வேறு இடங்களுக்கு ஊழியர்களும் சென்றுள்ளனர். வைத்திய சாலை வெறிச்சோடியுள்ளது. 07

## பருத்தித்துறையில் குண்டு வீச்சு மூவர் காயம்; பாஜ்கள் சேதம்

பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கி நேற்று முன்தினம் இரவு .7 மணிக்கு இரு பொம்மர்கள் தாக்குதல்களை நடாத்தின.

இரு குண்டுகள் வீசப்பட்டதால் துறைமுகத்திற்கு அருகில் இருந்த உணவுக் கடையும், கரையில் நிறுத்தப்பட்டிருந்த இரு பாஜ்களும் சேதமடைந்துள்ளன.

—04ஆம் பக்கம் பார்க்க

## அரச பத்திரிகை குற்றச்சாட்டு

# தவறான வானொலி செய்திக்கு இந்தியத் தூதரகமே காரணம்!

சபாநாயகர் முஹமட் இராஜினாமா செய்துவிட்டதாக இந்திய செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டமைக்கு காரணம் கொழும்பில் உள்ள இந்தியத்தூதரகமே.

இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது அரசசார்பு ஆங்கிலப் பத்திரிகை அகில இந்திய வானொலி நிருபர் கருப்பசாமிக்கு இந்தியத் தூதரக அதிகாரிகளே இவ்வாறான தவறான தகவலை அளித்துள்ளனர் என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## மணலாறில் குண்டுவீச்சு விவசாயம் பாதிப்பு

மணலாறு - முல்லைத்தீவு மாவட்டங்களிலும் நேற்று குண்டுவீச்சுத்தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் நிகழ்ந்த மணலாறு யுத்தத்திற்குப் பின்னர் மீளவும் திரும்பி விவாசாயத் தொழிலை புரிய வந்த மக்களும் காலபோகச் செய்கையினைமேற்கொள்ள முடியாது இடம் பெயர்ந்து வருகின்றனர். 07

## சீ - பிளேன் நோட்டம்

நேற்று முழுநாளும் தீவகக் கடற்பரப்பிலும், வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகளிலும் சீ-பிளேன் நோட்டமிட்டுச் சென்றது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வலிகாமம் கிழக்குபகுதியில் ஆறு அகதி முகாம்கள்

வடமராட்சிப் பகுதிகளிலிருந்து வலிகாமம் கிழக்குப பகுதியில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களுக்கு ஆறு அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன

இம்முகாம்களில் தங்கியிருக்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## நள்ளிரவு தாக்கு

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று நள்ளிரவு திடீரென ஆட்லறி ஷெல் தாக்குதல்கள்வடமராட்சியை நோக்கி நடாத்தப்பட்டன 01

# வட-கிழக்கில் யுத்த நடவடிக்கை நிறுத்தப்படாது என்கிறார் ரணில்

வடக்குக்கிழக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து நடாத்தப்படுமென அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்தத்திற்கான ஒரு உடன்பாடு எட்டப்படும் வரை இராணுவநடவடிக்கைகள் நிறுத்தப்பட மாட்டாது எனத்தெரிவித்த அவர் அதே வேளை அமைச்சர் தொண்டமான் போன்றோர் சமரச முயற்சிகளில் ஈடுபடலாம், அதில் தவறில்லை எனவும் தெரிவித்தார்.

## ஸ்ராட்டுக்கும் பெற்றோல் தேவையில்லை தீப்பந்தமே போதுமானது

பெற்றோல் இன்றியே இயந்திரத்தை இயக்கக் கூடிய சிக்கனமான எளிய முறையொன்றை ஆய்வு நிறுவனம் அறிமுக படுத்தியுள்ளது.

இயந்திரத்தை இயக்குவதற்கு முன்னதாகக் காபறேற்றரில் உள்ள எயாக் கிளீனரை கழற்றி விடவேண்டும் சிறு தடியில் துணியொன்றைச் சுற்றிப் பந்தம் செய்ய வேண்டும். இதற்கு மண்ணெண்ணெய் தோய்த்துத் தீப்பற்ற வைக்க வேண்டும். பந்தத்தைக் காபறேற்றரின் வாசலில் பிடிக்க வேண்டும் இதன்போது இப்புகை காபறேற்றரில் படும். அப்போது இயந்திரத்தை இயக்கத் தொடங்க இயந்திரம் இயங்கும்.

அல்லது (ட) வடிவ உலோகக் குழாயின் சிறிய வாசலைச் சூடாக்க வேண்டும். இக்குழாயின் சூடான பகுதிக்குள சில துளிகள் மண்ணெண்ணெய்யை விடவேண்டும். இதன் சூட்டில் மண்ணெண்ணெய் ஆவியாகும் இவ்வாவி காபறேற்றரில் படும்போது இயந்திரம் இயக்கப்படில் இயங்க ஆரம்பிக்கும். இப்புதிய கண்டுபிடிப்பை நெல்லியடியைச் சேர்ந்த திரு தவலிங்கம் கண்டுபிடித்துள்ளார். பெற்றோல் விலை பெருமளவு அதிகரித்துள்ள இக்கால சூழ்நிலையில் இந்நடைமுறை இலாபகரமான செயற்பாடாகும்.

## பாலைவனங்களில் பனைமரங்கள்; மழையை வரவழைப்பதற்காக

மழையை உண்டு பண்ணுவதற்காக அரேபியாவின் பாலைவனங்களில் உயரமான மரங்களைநடும் புதிய முயற்சியொன்று எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக அரேபிய பாலைவனங்களில் பிளாஸ்டிக்கிலான பனை மரங்கள் நாட்டப்படவுள்ளன.

இந்த பிளாஸ்டிக் பனை மரங்கள் பல பாகங்களாகத் தயாரிக்கப்பட்டுப் பாலைவனங்களில் வைத்துப் பொருத்தி நிறுத்தபடுகின்றன

## ஆசிரியர் முற்பணக் கடன்; அமைச்சு நிதி வழங்காது

கல்வித்திணைக்களத்திலும் கோட்டக் கல்வி அலுவலகங்களிலும் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் மற்றும் மாகாண சேவையிலுள்ள ஆசிரியர்களுக்கும் 1-9-91 முதல் முற்பணக் கடன்களையோ சம்பளக் கடன்களையோ வழங்குவதற்கான நிதியை அனுப்பி வைக்க முடியாது என கல்வி உயர் கல்வி அமைச்சின் கணக்காளர் சகல கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான நிதியைத் திரட்டுவது சம்பந்தப்பட்ட மாகாணசபைகளினது கடமையாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஆசிரியகல்லூரியில் பயிற்சிபெறும் ஆசிரியர்கள் ஆசிரியகலாசாலை அதிபர்கள் விரிவுரையாளர்கள், ஊழியர்கள், தேசிய பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், ஊழியர்களுக்குரிய கடன்களை எதுவித தடையுமின்றி வழங்குமாறு அவர் பணித்துள்ளார். (15)

## சிக்கன கடன் சேமிப்பை மீளப்பெற முடியாத நிலை

கல்வித் திணைக்கள சிக்கன கடன் உதவு கூட்டுறவு சங்கத்தில் பணம் செலுத்திய வடபகுதி ஆசிரியர்கள் தாம் ஓய்வு பெற்றதன் பின் செலுத்திய பணத்தை மீளப் பெறமுடியாத நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அவர்கள் கொழும்பிலுள்ள சங்கத்தின் தலைமையலுவலகத்துடன் தொடர்பு கொண்டும் எதுவித பதிலும் கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப் படுகிறது.

கொழும்பிலுள்ளஇந்த அலுவலகத்தில் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஊழியர்களே அதிகமாக பணிபுரிகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (01)

## அம்பனை கொத்தணி கலைவிழா

அம்பனைக் கொத்தணிப் பாடசாலைகளின் கலைவிழா 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மகாஜனாக் கல்லூரி துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது

## அமைதிப்படையினரிடம் பலியான பொதுமக்களுக்கு அஞ்சலி

87ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ஆம் திகதி கோண்டாவில் வடக்குப் பகுதியில் இந்திய அமைதிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 53 பொதுமக்களின் ஞாபகார்த்த நாளன்று கோண்டாவில் கலைவாணி விளையாட்டுக் கழகம் அப் பகுதியில் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியினை நடாத்தியது.

அங்கு இறந்தோருக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது எதிர்வரும் 20 ஆம் திகதி இறுதிப்போட்டி நடைபெறவுள்ளது, (07)

## குளங்களை புனரமைக்க 'போரூட்' நிறுவனம் உதவி

யாழ்மாவட்டத்தில் மேலும் பல குளங்களை புனரமைப்புச் செய்வதற்கு போரூட் நிறுவனம் முன்வந்துள்ளதாக யாழ் அரச அதிபர் கே. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

யாழ் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இது தெரிவிக்கப்பட்டது.

இந்தகுளங்களை புனரமைப்புச் செய்யும் போது செயலகம் உணவுவசதிகளைச் செய்ய வேண்டும் என்று 'போரூட்' பிரதிநிதிகளால் கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (04 - 06)

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்- பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்களுக்கான கலந்துரையாடல் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிளி. விலங்கியல் துறைப் பண்ணையில் 'சீஸ்' உற்பத்தி செய்ய முயற்சி!

யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாய பீட விலங்கு வேளாண்மைத்துறை 'சீஸ்' (பாற்கட்டி, வெண்ணெய், நெய் ஆகிய பாற்பொருள்களை உள்ளூரில் உற்பத்தி செய்யும் முயற்சியொன்றில் ஈடுபட்டுள்ளது.

இவற்றுக்கான உகந்த உபகரணங்களைத் தருவிப்பதற்கான நடவடிக்கையை விலங்கு வேளாண்மைத்துறை எடுத்துள்ளது.

கிளி. விலங்கு வேளாண்மைத்துறைப் பண்ணையில் தற்பொழுது 20 நல்ல இனப் பாற்பசுக்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. பால் பதனிடும் தொழில் நுட்பத்தைக் கிராமிய மக்களுக்கு அறிமுகப் படுத்தும் பணியை இத்துறை மேற்கொள்ளவுள்ளது.

கிளி 155 ஆம் கட்டையில் 35 ஏக்கர் காணியில் அமைந்துள்ள விவசாய பீடத்தில் ஆறு ஏக்கர் காணி கால்நடைத் தீவனத்திற்கு நல்ல இனப் புற்கள் வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது இங்கு தற்போது உற்பத்தி செய்யப்படும் பால், தயிர், யோக்கற் என்பன கிளிநொச்சி மாவட்டத்தில் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன. கால்நடைக் கழிவுப் பொருள்களிலிருந்து உயிரியல் வாயுவும் இங்கு உற்பத்தி செய்யப்பட்டுப் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவை குறித்த விவரங்களை மேற்படி துறையிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

## 'பட்ஜெட்' விவாதம் இம்முறை 26 தினங்களுக்கு நடைபெறும்

1992 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட விவாதம் பாராளுமன்றத்தில் இம்முறை 26 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

நவம்பர் மாதம் 13 ஆம் திகதி பட்ஜெட் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளது

## இந்தியாவில் நிலவும் கடும் வறுமை; 'புரொன்ட்லைன்' தரும் ஓர் எடுத்துக்காட்டு

இந்தியாவில் வறுமையின் கொடுமை எந்தளவிற்கு கட்டு மீறியுள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாக 'புரொன்ட் லைன்' இதழ் தகவல் ஒன்றினை வெளியிட்டுள்ளது. சவூதி அரேபியாவைச் சேர்ந்த பெரும் செல்வந்த வியாபாரியான ஷேக் (60 என்பவர் கேரளாவைச் சேர்ந்த ஏழை ஆட்டோ ரிக்ஷா சாரதியின் மகளான 11 வயதுடைய அமீனா என்ற சிறுமியை திருமணம் செய்துகொள்ளும்பொருட்டு ஒரு இலட்சம் ரூபா விலைகொடுத்து வாங்கினார். விமானத்தில் இச் சிறுமி விம்மி, விம்மி அழுவதனைக் கண்ணுற்ற விமானமோட்டியும், சக பிரயாணிகளும் சிறுமியை அணுகி விவரம் தெரிந்து கொண்டனர். தனது மூத்த சகோதரிகளுக்குத் திருமணம் செய்து கொடுக்கவே தனது ஏழைத் தந்தை தன்னைக் குறிப்பிட்ட பணத்திற்கு விற்றதாகவும், பிரதாப வியாபாரி தனது தாத்தாவிலும் மூப்புடையவர் என்றும் அவள் கூறினாள்.

புதுடில்லி விமான நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த இருவரில் வியாபாரி கைது செய்யப்பட்டார் பெற்றோரிடம் மீண்டும் செல்ல அச்சமுற்ற சிறுமி மகளிர் அமைப்பின் நடவடிக்கையால் மகளிர் பாதுகாப்பு நிலையம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

## 36 ஆயிரம் அகதிகள் மடு அகதிமுகாமில் தஞ்சம்

மடு அகதி முகாமிற்கு 20 மெற்றிக்தொன் அரிசி, மா, சீனி போன்ற உணவுப் பொருள்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது 36 ஆயிரம் மக்கள் அங்கு அகதிகளாக தங்கியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## உற்பத்திக்குழு எச்சரிக்கை

காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் சகல மக்களும் தங்கள் கட்டாக்காலி ஆடு, மாடுகளை கட்டி வளர்க்கவேண்டும் என்றும் இதனை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சங்கானை உற்பத்திக்குழு அறிவித்துள்ளது.

## வை. எம். சி. ஏ உதவி

இடம்பெயர்ந்து பண்டத்தரிப்புப் பகுதியில் வசித்து வரும் மிகவும் வறுமை நிலையிலுள்ள இருநூறு குடும்பங்களுக்கு கடந்த வியாழக்கிழமை பண்டத்தரிப்புவை. எம் சீ ஏ. நிறுவனம் பொருள்களை அன்பளிப்பாகவழங்கியது

## லெப். கிர்மானி போட்டிகள்

வீரவேங்கை லெப். கிர்மானி ஞாபகார்த்தமாக குருநகர் பாடுமீன் கழகத்தினரால் நடத்தப்படும், தவிர்த்தல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டித்தொடரில் இடம்பெற்றபோட்டியில்வைக்கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி யுத்காமல் விளையாட்டுக் கழக அணியை 2 க்குப் பூஜ்ஜியம் என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது. இப்போட்டிக்கு நடுவராக கே. நாகேந்திரனும் உதவி நடுவர்களாக எம். பீறான்சிஸ் கே. கருணாகரன் ஆகியோரும் கடமையாற்றினார்கள். (16)


St. John's College, Jaffna

and

Chundikuli Girl's College, Jaffna.

### அறிவித்தல்

### ஆண்டு: 6, 10 பிரவேசப்பரீட்சைகள்

1. இன்று (19 - 10 - 91) நடைபெற இருந்த பிரவேசப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
2. பரீட்சைக்கான புதிய திகதி பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும்.

அதிபர்கள்

18 - 10 - 1991

10022

## வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகையாளர்கள்

# வடக்கே வர நேற்றுமுதல் தடை !

வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகையாளர்கள் வடபகுதிக்குச் செல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு நேற்று முதல் தடை விதித்துள்ளது

தமது அனுமதியின்றி எந்தவொரு நிருபரும் தாண்டிக்குளம் தடை முகாமைத் தாண்டி வடபகுதிக்குச் செல்லக் கூடாதெனக் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகள் முடுக்கிவிடப் பட்டுள்ளமையே இப் புதிய தடைக்குக் காரணமெனவும் சொல்லப்படுகின்றது.

## கப்பலில் நடந்த கொலை; எதிரிக்கு 2 வருட சிறை

கப்பலில் நடந்த கொலை பற்றிய வழக்கில் எதிரிக்கு 5 ஆயிரம் ரூபா அபராதமும் 8 வருட காலத்திற்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 வருட கடூழியச்சிறைத் தண்டனையும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியினால் விதிக்கப்பட்டது.

இந்த வழக்கில் சொங் ஜொங் சுங் என்ற கொரிய மாலுமியை கடந்த ஆகஸ்ட் 29-ம் திகதி 'ஓர்கிட்' என்ற கப்பலில் வைத்துக் கொலை செய்ததாக கானாங் சுங்ஜோ என்ற சககொரியர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி கைமோசக் கொலைக் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்தே இத் தண்டனை வழங்கப்பட்டது, இறந்தவரின் குடும்பத்திற்கு கப்பலின் சொந்தக்காரர்களான ஜப்பானிய கம்பனி நஷ்ட ஈடாக 68 ஆயிரம் அமெரிக்க டாலர்களை வழங்கிவிட்டதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது

## மாணவிகளின் வாணி விழா

திருமதி விமலினி சுகந்தனின் மாணவிகள் வழங்கும் வாணிவிழா 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## கல்வி நிர்வாக அதிகாரிகளின் பதவிப் பெயர்கள் மாற்றம்

கல்வித் திணைக்களத்திலும், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திலும் தற்போது கடமையாற்றும் இலங்கைக் கல்வி நிர்வாகச் சேவை II மற்றும் III ஆம் வகுப்புக்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் பதவிப் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.

இதன்படி கல்வித் திணைக்கள, கோட்டக் கல்வி அலுவலகங்களில் உள்ள இ. க. நி. சேவை II தரத்தைச் சேர்ந்தவர்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாகவும், இ. க. நி. சேவை III தரத்தைச் சேர்ந்தவர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்களாகவும் பெயர் மாற்றப்பட்டுள்ளனர்.

இதேபோன்று கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த இ. க நி. சேவை II-ம் தரத்தைச் சேர்ந்தவர்கள் பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்களாகவும், இ. க. நி. சேவை III ஆம் தரத்தைச் சேர்ந்தவர்கள் உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்களாகவும் பெயர் மாற்றப்பட்டுள்ளனர். (15)

## பல இந்து ஆலயங்கள் மன்னாரில் செயலிழந்த நிலையில்

மன்னார் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்கள் இன்னும் செயலிழந்துள்ள நிலையிலேயே காணப்படுவதாகவும் நீண்ட நாள்களாக பூசைகள் நடைபெறவில்லையெனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதியில் இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பதால் திருக்கேதீஸ்வரம் சித்திவிநாயகர் ஆலயம், ராஜராஜேஸ்வரி ஆலயம் மன்னார் வைத்திய சாலைமுருகன் கோயில், மற்றும் பேசாலை ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவில், தலைமன்னார் மாரியம்மன் கோயில் என்பன பூசைகள், வழிபாடுகள் இன்றி காணப்படுவதோடு, இவ்வாலயங்களின் சேத நிலைமைகளைப் பார்வையிடக்கூட எவரும் செல்ல முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது (08)

## வீட்டுப் பாவனைக்குரியபொருள்களை எடுத்துவர அனுமதிக்கப்படுமாம்

தடைசெய்யப்பட்ட பொருள்களில் ஒரு சிறிய அளவை வீட்டுப் பாவனைக்கென வடக்கே எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுமென கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவிக்கின்றது.

அத்தியாவசியப் பொருள்கள் தவிர்ந்த இந்த வீட்டுப் பாவனைக்கான பொருள்களை எடுத்துச் செல்வதற்கான அனுமதிப் பத்திரத்தை கொள்ளுப்பிட்டியிலுள்ள புனர்வாழ்வு அமைச்சில் பெற்றுக்கொள்ளல் வேண்டுமெனவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திறந்த பல்கலை விரிவுரைகள் மீண்டும் வழமை போல

யாழ் பிராந்திய நிலையத்தில் தடைப்பட்டிருந்த பெரும்பாலான கற்கை நெறிகள் மீண்டும் வழமை நிலைமைக்கு வந்துள்ளன. யாழ்-கொழும்பு தொடர்புகளில் மாற்று ஒழுங்கு முறைகள் எடுக்கப்பட்டுள்ளன

சட்டமாணிப் பட்ட 1991/92இற்கான விண்ணப்பப் படிவங்கள் 15 ஆம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்படுகின்றன விண்ணப்ப முடிவு இம்மாதம் 31 ஆம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது.

விஞ்ஞானமாணி/ தொழில் நுட்பவியல் டிப்ளோமா 1990, 1991ஆம் ஆண்டுகளுக்கான விண்ணப்பதாரிகளின் பதிவுகள் கொழும்பில் அக்டோபர் மாதம் 31ஆம் திகதி வரை ஏற்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'கருப்பசாமி மீதான நடவடிக்கை நடுநிலைப்பணியைப் பாதிக்கும்'

அகில இந்திய வானொலியின் கொழும்பு நிருபர் கருப்பசாமி இலங்கை அரசினால் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவதை இலங்கையிலுள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்கள் சங்கம் கண்டித்துள்ளது.

இந்த நடவடிக்கை இங்குள்ள ஏனைய வெளிநாட்டுச் செய்தியாளர்களை எச்சரித்து அவர்களின் நடுநிலையான பணியினைப் பாதிக்கச் செய்யும் ஒரு முயற்சியெனவும் அது கண்டித்துள்ளது.

இதனிடையே கருப்பசாமியின் வெளியேற்றம் குறித்து இந்திய அரசு தனது கடும் கண்டனத்தையும் ஆட்சேபனையும் இலங்கை அரசுக்குத் தெரிவித்துள்ளது.

இலங்கை வானொலியும், தொலைக்காட்சியும்கூட பாரதப் பிரதமர் பற்றிய செய்திகளை பல தடவைகள் தவறாக ஒலிபரப்பியுள்ளமையும் இந்திய அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

## வெளித்தடை நீங்கினாலும் உள்ளுக்குள் தொடர்சிக்கலே

சர்வதேச கிரிக்கட் போட்டிகளில் தென்னாபிரிக்கா கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள இதேவேளை அந்த நாட்டில் பெரியதொரு கிரிக்கட் சிக்கலொன்று உருவாகியுள்ளதாகத் தகவல்களில் தெரிவிக்கப்படுகிறது

தென்னாபிரிக்காவில் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையில் சிறுபான்மை வெள்ளையர்களே அதிகளவில் இடம்பெறுகிறார்கள். இந்த இனவாதம் கொண்ட பொலிஸ், மற்றும் படை அணிகளுடன் எந்தவொரு கிரிக்கட் போட்டிகளிலும் தாம் கலந்துகொள்ளப் போவதில்லையென அங்குள்ள பெரும்பான்மை வெள்ளையரல்லாத அணிகள் தீர்மானித்துள்ளன. (16)

## அதிரடிப்படையின் தேடுதலில் பல தமிழர்கள் கைது

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று திருக்கோயில், ஆலையடி வேம்பு, சின்னமுத்து அரன் ஆகிய பகுதிகள அதிரடிப் படையினால் கடந்த செவ்வாய்க்கிழமை சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடாத்தப்பட்டது.

இத் தேடுதலின்போது பல தமிழர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## ஊக்குவிப்புக் கொடுப்பனவு விண்ணப்பம் உரிய இடம் செல்லவில்லை

01.01.88 தொடக்கம் 04.07.89 வரைகடமைபுரிந்த ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு தொடர்பாக இதுவரை யாழ் பிரதேசத்திலுள்ள பெரும்பாலான கோட்டக்கல்வி அலுவலகங்கள் கோரிக்கை விடுக்கவில்லை என யாழ் கல்விப் பகுதி தெரிவித்துள்ளது.

வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகம் மட்டும் இக்கால பகுதியில் கடமைபுரிந்த ஆசிரியர்கள் ஊழியர்களுக்கு வழங்குவதற்கான கட்டுநிதிக்குத் தமது விண்ணப்பத்தை வழங்கி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சகல கோட்டங்களும் மேற்கூறிய கொடுப்பனவை வழங்க கட்டுநிதிக்கு இம்மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் தமது கணக்குகளை சமர்ப்பிக்குமாறு யாழ் கல்வித்திணைக்களம் கேட்டுள்ளது. (15)

## பொதுக் கூட்டம்

பண்டத்தரிப்பு ஓய்வூதியம் பெறுவோர் சேமலாப ஐக்கிய நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. எஸ். மாட்டின் தலைமையில்நடைபெறவுள்ளது. 13

# அகதி நிதிஉதவி பெறுவதில் மோசடி

## இரு யாழ் இளைஞர்கள் நாடு கடத்தல்

சுவிஸ் நாட்டில் ஆள் மாறாட்டம் செய்து இரு இடங்களில் அகதிக்காசு பெற்ற யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கண்டு பிடிக்கப்பட்டு இலங்கைக்கு மீண்டும் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் சுவிஸ் நாட்டுக்குச் சென்றடைந்த இவர்கள் அங்குள்ள அகதிமுகாம் ஒன்றில் தங்கியிருந்து அகதிகளுக்கான உதவிப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வேறோர் இடத்திலுமுள்ள அகதிமுகாமிலும் சென்று அகதிகளுக்கான உதவிப் பணத்தைப் பெற்று வந்தனராம்.

வலிகாமம் மேற்கைச் சேர்ந்த இவர்கள் இருவரும் கொழும்பு வந்தடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (13)

## 55 கலன் பெற்றோலுடன் பொலநறுவையில் இருவர்கைது!

தேவைக்கு அதிக அளவு பெற்றோலை வாகனத்தில் எடுத்துச் சென்ற இரு இளைஞர்கள் பொலநறுவையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது வாகனத்தின் தாங்கியில் 55 கலன் பெற்றோலை நிரப்பிச் செல்கையிலேயே கைது செய்யப்பட்டனர்.

## மூடப்பட்டபாடசாலைகள்விவரம் கல்விப் பகுதியால் சேகரிப்பு

தற்பொழுது இயங்காமல் மூடப்பட்டிருக்கும் பாடசாலைகளின் விவரங்களும், வேறு பாடசாலைகளில் இயங்கும் பாடசாலைகளின் விவரங்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இதுபற்றிய விவரங்களை உடனடியாகத் தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் சகல கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும் கேட்டுள்ளார். (15)

## சகாயவிலையில் உரம்

தொல்புரம் கமநலச்சேவை நிலையப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு காலபோக நெற் செய்கைக்கான உரம் சகாய விலையில் வழங்கப்பட்டுள்ளது.

அவ்வப் பகுதி உற்பத்திக் குழுக்களின் சிபார்சின் பிரகாரம் விவசாயிகளுக்கு இந்த உரம் விநியோகிக்கப்பட்டது. (13)

## வறிய நாடுகளுக்கான 1700 கோடி டாலர் கடனை

# பிரிட்டன் மீளப்பெறாது!

தான் வழங்கிய கடன்களில் ஒரு குறிப்பிட்ட தொகையை மீளப் பெறப்போவதில்லை என பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

ஹராரேயில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொதுநலவாய நாடுகளின் 16 வது உச்சி மகாநாட்டிலேயே பிரிட்டன் இந்த அறிவிப்பை வெளியிட்டது.

இவ்வபறிவிப்புக்கமைய மிகவும் ஏழை நாடுகளுக்கு வழங்கப்பட்ட 1700 கோடி டாலர்கள் கடனை மீள பெறாது விடப்போவதாகவும் பிரிட்டிஷ் பிரதமர் ஹாராரே மகாநாட்டில் தெரிவித்தார்.

## சைக்கிள் எடுத்துவர வவுனியா செயலகத்தில் பாஸ்!

வவுனியாவில் இருந்து வட பகுதியை நோக்கி சைக்கிள் கொண்டுவர படையினர் கடும் தடை உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

ஒன்றுக்கு மேற்பட்ட சைக்கிள் கொண்டுவருவதாயின் வவுனியா செயலகத்தில் பயணிகள், மற்றும் வியாபாரிகள் ''பாஸ்'' பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

இப் ''பாஸி''சினைப் பெற்றுக்கொண்ட பின்னரே படையினர் சைக்கிளுடன், சைக்கிள் சாவிகளையும் கொண்டுவர அனுமதிக்கின்றனர்.

இதே வேளை கொழும்பிலிருந்து வருபவர்கள் தங்கங்களை கட்டியாகவின்றி நகையாகவே கொண்டுவரலாம் எனவும் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர் 18,01

## ஊரடங்குச் சட்டம் வர்த்தகர்களுக்கு லாபம்

அரசால் அறிவிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் யாழ் குடாநாட்டில் அமுல்படுத்தியதைத் தொடர்ந்து மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய், சீனி மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கூட்டி வியாபாரிகள் விற்பதைக் காணமுடிகிறது.

கடந்த சில வாரங்களாக குறைந்த விலையில் விற்கப்பட்ட இப்பொருள்கள் ஊரடங்கு சட்டம் அமுலானதும் விலையேற்றப்பட்டுவிட்டது.

இதேவேளை கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களுடன் பெருந் தொகையான லொறிகள் யாழ் குடாநாடு வந்துகொண்டிருப்பதாகவும் வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. 06

## உத்தரப்பிரதேச குண்டுவெடிப்பு பாகிஸ்தான் காரணமாம்

நேற்று முன்தினம் உத்தரப் பிரதேசம் ருத்திரபூர் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கு பாகிஸ்தான் உளவு நிறுவனம் (I. S. I) பின்னணியில் இருந்ததாக இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

எனினும் இந்தியாவின் இக்குற்றச்சாட்டை பாகிஸ்தான் நிராகரித்துள்ளது. இக் குண்டு வெடிப்பில் நாற்பதுக்கும் மேற்பட்டோர் பலியானது தெரிந்ததே.

## ஆஸ்பத்திரி பஸ்சேவை அச்சுவேலி வரையும்

யாழ்-பருத்தித்துறை வைத்தியசாலை மினிபஸ் சேவை இன்றுமுதல் அச்சுவேலி வரையே மேற்கொள்ளப்படும் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியசாலை ஊழியர்களை ஏற்றி வரும் வாகனங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளாதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரைக் கோரியிருப்பதாக ஆஸ்பத்திரி பணிப்பாளர் தெரிவித்தார். 04

## மாணவர்களின் வரவு பாடசாலைகளில் குறைவு

ஊரடங்குச் சட்டம் அமுலானதையடுத்து நேற்று யாழ் குடாநாட்டில் உள்ள பாடசாலைகள் இயங்கவில்லை.

ஒரு சில பாடசாலைகள் இயங்கிய போதிலும் மாணவர்கள் வரவு குறைவாகவே காணப்பட்டது.

சில பாடசாலைகளில் அகதிகள் இருப்பதால் அவை செயற்படவில்லை, 18

## தெல்லிப்பழை கூ. சங்கத்தில் உணவு அட்டைக்கு சவர்க்காரம்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தைச் சேர்ந்த உலர் உணவு அட்டைகளுக்கு 3 சவர்க்காரங்கள் தெல்லிப்பழையில் விநியோகிக்கப்படுகின்றன.

ஓர் உலர்உணவுஅட்டைக்கு 2சன்லைட்டுக்கள் ஒன்று 8 50 வீதமும் 1 லக்ஸ் அல்லது லைபோய் அல்லது ரெக்சோனா சவர்க்காரம் 10 ரூபா வீதமும் விநியோகிக்கப்படுகின்றன

நேற்று ஆரம்பிக்கப்பட்ட இவ் விநியோகம் இருப்பு உள்ளவரை நடைபெறும் எனத் தெரிகிறது 21

## யாழ் பெரியாஸ்பத்திரிக்கு மருந்துகள் கிடைக்க ஏற்பாடு

தற்போதைய சூழ்நிலையில் போதனா வைத்தியசாலைக்கு மருந்து வகைகள் தங்குதடையின்றி கிடைப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டுமென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் யாழ் வைத்தியசாலைப் பணிப்பாளர் வேண்டியுள்ளார்.

யாழ் மாவட்டத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தினால் கப்பல் இங்கு வரமாட்டாது என்ற காரணமாகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். 04

### பாடசாலையில் தஞ்சம்

அராலித்துறையில் இருந்து இடம்பெயர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் நவாலி, அரசடி மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ளன. இவர்களில் அனேகமானோர் சிறு குழந்தைகள். இவர்களுக்கு இதுவரை உணவு வசதிகள் செய்யப்படவில்லை எனத் தெரியவருகிறது. 01

தென்பகுதி எம். பிக்களுக்கு

# பிரேமா அரசைத் தோற்கடிக்க முன்வருமாறு லலித் அழைப்பு

ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தியாளர் குழுவில் இணைந்து அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசாங்கத்தை தோற்கடிக்க முன்வருமாறு ஐ.தே.க. எம். பிக்களுக்கு முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காலியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

நாங்களும் ஐ.தே.க. பாதையில் தான் நிற்கிறோம் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட நாம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் எமக்குச்சாதகமான முறையில் தீர்ப்பு இருக்கும் என்று நாம் நம்பிக்கையுடன் இருக்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காமினி திஸநாயக்கா தமது உரையில் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு சார்பாகவும், எமக்கு எதிராகவும் சுவரொட்டிகள் ஒட்டப்படுவதற்கு அரசின் ஜீப்கள் பயன்படுத்தப்படுகின்றன. முன்னாள் அமைச்சர் பிரேமச்சந்திரா உட்பட பலர் உரையாற்றினர். (06)

### வல்வையில்...

வீதியில் உள்ள நான்கு வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

மக்கள் இடம் பெயர்ந்து சென்றதால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 09

### வலிகாமம்...

கும் மக்களின் நலன்களை கவனிக்க இருபத்திநாலு மணிநேரமும்கோப்பாய்உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம சேவையாளர்களை சேவையிலிருக்குமாறு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு, எஸ் முருகேச பிள்ளை பணித்துள்ளார்.

முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவுக்கிளை, புனர்வாழ்வுக் கழகம், சிற்றூரவை என்பன உலர் உணவுப் பொருள்களை வழங்கிவருகின்றன. 06

### சீ-பிளேன் ..

இதேவேளை காரை நகர் கடற்பரப்பிலும், தீவகக் கடற்பரப்பிலும் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் இடையிடையே தாக்குதல்கள் தொடுத்துள்ளன. 18, 01

### சரவணை...

உள்ள வீடுகள் தீப்பற்றி எரிந்ததுடன் புகைமண்டலங்களாகவும் காட்சியளித்ததை காணக்கூடியதாக விருந்தது.

சரவணைப் பகுதியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதல்களினால் பெருமளவான பொதுமக்களின் சொத்துகளும், கால்நடைகளும் அழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 07, 01

### கட்டைக்காட்டு—

தெரியவந்துள்ளது. கடற்படையினரின் ரோந்து நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது 07

### பருத்தித்துறையில்

இந்த யாஜ்கள் மூலமே கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தால் உணவுக் கடைக்கு அருகில் நின்ற ஜோர்ஜ்ரஞ்சன் (14)-பலாலி, தம்பு பொனியப்பா (60) - பலாலி கடை உரிமையாளர் அருணாசலம் செல்லத்துரை (55), பருத்தித்துறை ஆகியோர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 9

## வலி. வடக்கு முகாம்களில் இரவு துப்பாக்கிச்சூடு

நேற்று முன்தினம் நள்ளிரவில் வலி வடக்கில் உள்ள இராணுவ மினி முகாம்களில் இருந்து பலத்த துப்பாக்கித் தாக்குதல் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்டது.

தச்சன்காடு, மாவிட்டபுரம் சாந்தை சந்தி, கட்டுவன் ஆகிய முகாம்களில் இருந்து இத் துப்பாக்கித் தாக்குதல் தொடர்ந்து 10 நிமிடங்கள் வரை மேற்கொள்ளப்பட்டதாகத்தெரிகிறது. 21

## கட்டுவன், வீமன்காமத்தில் படையினர் மீது தாக்குதல்

நேற்று முன் தினம் அதிகாலை ஒரு மணியளவில் கட்டுவன், வீமன்காமம் பகுதியிலிருந்து வெளியேற இராணுவத்தினர் முயற்சி செய்துள்ளனர்.

படையினரை எதிர்த்து விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை தொடுத்தனர் இதனால் படையினர் பின் வாங்கிச் சென்றனர்.

## நிருபர் வெளியேற்றத்திற்கு இந்தியா ஆட்சேபம்

அகில இந்திய வானொலி நிருபர் அ கருப்பசாமி இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டதைக் கண்டித்து இந்தியா தனது ஆட்சேபத்தை ஸ்ரீலங்கா அரசிடம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் ஆட்சேபக் கடிதம் ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சிடம் வழங்கப்பட்டது செய்தியாளர்கள் தவறு விடலாம் எனவும் கொழும்பு செய்தி நிறுவனங்கள் இந்திய தரப்புச் செய்திகளை தவறாக வெளியிடுகின்றன எனவும் அந்த ஆட்சேபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய போக்கு இந்திய - இலங்கை உறவைப் பாதிக்கலாம் என இந்தியா தெரிவித்துள்ளது.

## ஆபத்துக்கால கொடுப்பனவு தமிழருக்கு பாரபட்சம்!

ஆபத்துக்கால விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குவதில் அரசு தமிழ் அரச ஊழியர்கள் மீது பாரபட்சம் காண்பிப்பதாக தமிழ்த் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள சிங்கள அரச ஊழியர்களுக்கு இக்கொடுப்பனவு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது ஆனால் இங்குள்ள தமிழ் அரச ஊழியர்களுக்கு லீவு எடுத்த நாள்களுக்கு இக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 06

## கற்பூரம் கடத்திய ஆறுபேர் பிணையில் செல்ல அனுமதி

வடபகுதி நோக்கி விம்டின்களின் அடைக்கப்பட்டு கற்பூரம் கடத்திய ஆறுபேர் அனுராதபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 90 நாள்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

லொறிச் சாரதிகள், கிளினர்கள் மற்றும் உதவியாளர்கள் ஆகிய ஆறுபேரே இவ்வாறு கைதானவர்களாவர்.

அநுராதபுரம் நீதவான் முன்பு இவர்கள் ஆஜர் செய்யப்பட்ட போது இவர்களை ஆயிரம் ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிடப்பட்டது. 06

### உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் சேவை

உடுப்பிட்டி பல நோ. கூ சங்கம் நேற்றும் நேற்று முன்தினமும் அப்பகுதி மக்களுக்கு ஊரடங்குச்சட்டத்தையும் பொருட்படுத்தாது சேவையாற்றியதைக் காணமுடிந்தது.

இதன் கிளைகளில் உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன.

இதே நேரம் யாழ் குடாநாட்டில் சில கூட்டுறவுச் சக்கக் கிளைகள் மூடப்பட்டிருந்ததையும் காணமுடிந்தது 09

### பாலர் பாடசாலை விவரம் சேகரிப்பு

யாழ் மாவட்டத்திலுள்ள சகல பாலர் பாடசாலைகளையும் 1992 ஆம் ஆண்டு முதல் உள்ளூராட்சித் திணைக்களத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கவைக்க யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (18)

## வீரமரணம்

மண்கும்பான் பகுதியில் நடைபெற்றமோதலில் நேற்று ஜீவன் (கனகு-லதீஸ்வரன் ஆலடிச்சந்தி, ஓட்டுமடம்) வீரமரணமடைந்தார்.

இவருக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 19.10.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.